1974 மார்ச் 27]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சேந்தமங்கலம் சட்டப்பேரவைத் தொகுதி, கொல்லிமலையில் 1947-ம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை 3,986.14 ஏக்கர் நிலம் 2,003 பேர்களுக்கு, பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, பட்டா வழங்கியதில் அரிசனங்களுக்கு எத்தனைபேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? எத்தனை ஏக்கர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மொத்தம் எத்தனைபேர்களுக்கு என்றுதான் இருக்கிறது. தனியாக அரிசனங்களுக்கு என்ற புள்ளிவிவரம் இல்லை.

திரு. அ. ஆறுமுகம்: தலைவரவர்களே, கொல்லிமலையில் எவ்வளவு ஏக்கர்கள் இன்னும் பட்டா கொடுக்கப்படாமல் இருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதற்கென்று தனியாக ஒரு கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் தருகிறேன் .

இனம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வரும் நிலங்கள்

*635 வின—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சென்னை இனம் ஒழிப்புச் சட்டம் 26/63-ன் படி நேரடி சாகுபடி இல்லாத நிலங்களை எடுத்துக்கொள்ள அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு இனம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) (தமிழ்நாடு சட்டம் 26/1963) சட்டத்தின்கீழ் பட்டா பெறுவதற்கான எல்லா நேர்வுகளிலும் நிலம் சொந்தச் சாகுபடியில் இருந்ததாக மெய்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி சட்டத்தின் 9-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள கால அளவில் தமது சொந்தச் சாகுபடியில் இருந்ததாக மெய்ப்பிப்பாராயின் நிலத்தை வைத்திருப்பவர்கள் நிலப்பட்டா பெறுவதற்குத் தகுதி

யுடையவர்களாவர். நிலத்தை வைத்திருப்பவர் இந்து சமய நிறுவனமாயிருப்பின், பட்டா வழங்கும் காரியத்துக்காக, நிலத்தை சொந்தச் சாகுபடியில் வைத்திருந்ததாக மெய்ப்பிக்கும் பொறுப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. எந்த நிலம் குறித்து நிலம் வைத்திருப்பவர் அல்லது வேறெருவர் மேற்படி சட்டத்தின் வேறு எந்த விதித்துறையின் கீழும் ரயத்துவாரிப் பட்டா பெற உரிமையில்லாமல் உள்ளாரோ அந்த நிலங்களைப் பொறுத்த வரையில், ரயத்து நிலங்கள் குறித்து பட்டா பெற மேற்படி சட்டத்தின் 10-வது பிரிவின்கீழ் ஒவ்வொரு குடியான வரும் உரிமை உடையவராகிறார். மேற்படி பிரிவின்கீழ் ரயத்து பட்டா பெறுவதற்கு சொந்தச் சாகுபடியை மெய்ப்பிப்பதற்கான தேவை இல்லை. மேற்படி சட்டத்தின் 9 அல்லது 10 ஆவது பிரிவின்கீழ் பட்டா பெறத் தகுதியுடையவர் யாரும் இல்லா திருந்து, அந்த நிலம் அரசிடம் நிலை பெற்றிருந்தால், அந்த நிலத்தை 11-ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ள கால அளவில் சொந்தத்தில் சாகுபடி செய்துகொண்டிருந்த நபர், 11-ஆவது பிரிவின்கீழ் அந்த நிலம் குறித்து பட்டா பெற உரிமையுள்ளவ ராவார். ஒன்பது, 10 அல்லது 11-ஆவது பிரிவின்கீழ் பட்டா பெற எவரும் உரிமையுடையவராக இல்லாதிருந்தால், அப்பொழுது அந்நிலம் அரசிடம் நிலைபெறும். நிலவரி ஏற்பாட்டு அதிகாரிகள் மேற்கண்ட விதித்துறைகளை ஏற்கெனவே செயல்படுத்தி வருகின்றனர்.

திரு. சோ. அழகர்சாமி: இந்த இனும் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் நிலத்திலே யார் யார் சாகுபடி செய்து வருகிறார்களோ, வீட்டு மனையை சொந்தத்தில் வைத்திருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் பட்டா வழங்க வேண்டுமென்று இருக்கிறது. திருச்சியில் நவாப் தோட்டத்தில் குடியிருக்கும் 50, 60 குடியானவர்களுக்கும், இனும் தாருக்கும் சேர்த்து ஜாயின்ட் பட்டா வழங்கக்கூடிய நிலை ஏற்பட் டிருப்பது பற்றிப் புகார் அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கிறதா? அந்தக் குடியானவர்களுக்கு தனியாகப் பட்டா வழங்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்தப் பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.